
ஆயிரம் பிறை கண்ட

அருளாளர் தவத்திரு நாச்சியப்ப சுவாமிகள்

முத்துவிழா வாழ்த்துப்பூக்கள்





ரிஷிகேஷ் ஆலமரத்தடியில் அருள்தரும் மகா கணபதி

முத்துரை

மனித குலம் மேன்மையடையத் தம் வாழ்க்கை நலன்களையும், இன்பங்களையும் துறந்து துறவுக்கோலம் கொண்டு, தொண்டுகள் புரிய உலகம் முழுதும் துறவிகள் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். அத்தவசிகளால் உலகம் இன்றும் காப்பாற்றப்படுகிறது. அவ்வரிசையில் நாட்டுக் கோட்டை நகரத்தார் குருபீடமாக உள்ள கோவிலூர் ஆதீனத்தின் 12ஆவது பட்டமான தவத்திரு நாச்சியப்ப சுவாமிகள் திகழ்ந்து வருகிறார்கள்.

கடந்த கால் நூற்றாண்டாகப் பல ஆதீனங்களுடன் நல்ல உறவு கொண்டுள்ள யான் சுவாமிகளின் பல பழுதில்லா ஆலம் விழுதனைய பணிகளைப் பார்த்து வியந்துள்ளேன். வாய்ப்பும் நேரமும் கிடைத்தபொழுது சுவாமிகள் இட்ட பணிகள் சில செய்ததுண்டு. சென்ற ஆண்டு கோவிலூரில் 96 ஊரார் மாநாடு நடைபெற்றபொழுது மகளிர் மேம்பாட்டு மலர் வெளியிட்டோம். அம்மலரின் மணம் கண்ட சுவாமிகள் நடைபெற்ற மாநாட்டு நிகழ்ச்சிகளைத் தொகுத்து ஒரு மலராகக் கொண்டு வரப் பணித்தார்கள். வரும் செப்டம்பரில் பொன்மலராக வர இருக்கும் மலருக்கு ஆன்றோர்கள், சான்றோர்கள் அளித்த சில, பல வாழ்த்துப் பூக்களை 16.5.2003 ஆம் நாளன்று நடைபெறும் சுவாமிகளின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவில் மங்கல மலராக அளித்து மகிழ்கிறோம். கோவிலூர் திருமடப் பெருமைகளை அறிந்த அருளாளர்கள் ஒரு நிமிடம் கூடத் தாமதமின்றி அருளுரை, வாழ்த்துரை அனுப்பிப் பெருமைப்படுத்தினார்கள். அவர்களின் தாள்கள் போற்றி மகிழ்கிறேன்.

புத்தர், நேரு - தம் வாழ்வில் பஞ்சசீலம் என்ற கொள்கை களை வகுத்து வாழ்ந்து காட்டியவர்கள். சுவாமிகளும் பஞ்சசீலக் கொள்கையுடையவராக நம்மிடையே நாளும் பொழுதும் செயல்பட்டு வருகிறார்.

1. ஓர் இனத்தின் ஆணிவேர் அவர்களுடைய பண்பாடு, கலை, மரபு ஆகியவையே. இவற்றை அம்மக்கள் வாழுமிடங்களில் காப்பாற்ற வேண்டும். சுவாமிகள் பல மையங்களையும் பல்கலைக் கழகத்தையும் இதற்கென உருவாக்கி வருகிறார்.

2. ஒருவர் கல்வி கற்றுவிட்டால் அவரால் அக்குடும்பம் சார்ந்துள்ள இனம் மேம்பாடு அடையும். எனவே அவருக்குக் கல்வி கற்க, தாராளமான பொருளாதார உதவியைச் செய்யவேண்டும். இக்கொள்கையின் அடிப்படையில் சுவாமிகள் சென்ற ஆண்டில் இத்திட்டத்தைக் கோவிலூரில் தீர்மானமாக நிறை வேற்றி 300 மாணவர்களுக்கு ஐம்பது இலட்சத்திற்கு மேல் கொடுத்துள்ளார்கள்.
3. புதிய கோயில்கள் பல உருவாக்குவதனை விட, பராமரிப்பற்று, வருவாயற்று உள்ள கோயில்களைப் பாதுகாக்க வேண்டும். நல்ல பணிகளைச் செய்து வரும் சங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் நிதி உதவி அளித்து ஊக்கப்படுத்த வேண்டும். பல கோயில் களுக்கும் கரூர், தஞ்சாவூர், அம்பத்தூர் முதலிய பல சங்கங்களுக்கும் முதியோர் இல்லங்களுக்கும் உதவியுள்ளார்கள்.
4. திருமடங்கள் தங்கள் நிதி நிலை ஆதாரத்திற்கேற்ப தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள், சாத்திர தோத்திரங்கள், நீதி நூல்கள் முதலிய வெளிவர வேண்டிய புத்தகப் புதையல்களைக் கொண்டு வரவேண்டும். சுவாமிகள் திருமந்திரம் நூலினை அயல் மொழியாளர் அறியுமாறு பல ஆங்கில நூல்களையும், சங்க இலக்கியங்களையும் வெளியிட்டுள்ளார்கள். தொல்காப்பியர் விருது அளிக்கும் பொழுது தம் கோவிலூர் திருமட சார்பாக விருது பெற்றவருக்குப் பொற்கிழி அளித்தார்கள்.
5. தலங்களுக்கு வருபவர்கள் இப்பொழுது அங்குள்ள நவீன ஓட்டல்களில் தங்கும் பழக்கம் கூடிவருகிறது. இதனை மாற்றிட, வரும் பக்தர்கள் தங்கிட அந்தத் தலங்களில் உள்ள திருமடங்களின் இடங்களில் நல்ல கட்டடங்களை எழுப்ப வேண்டும். சுவாமிகள் தமிழகத்தில் மட்டுமின்றி ரிஷிகேஷ், அமெரிக்கா, முதலிய இடங்களில் வியக்கத்தக்க நவீன கட்டடங்களைக் கட்டியுள்ளார்கள்.

இப்பஞ்சசீலக் கொள்கை கொண்ட சுவாமிகளை இவ்வாழ்த்துப் பூக்களில் வாழ்த்தியவர்கள் வரிகளும் மேற்கண்டவற்றை மெய்ப்பிக்கும்.

சுவாமிகள் பிறந்த தேதி 29.5.1923. இத்தேதியில் உலகில் யார் யார் தோன்றினார்கள் என்று உவமைக் கவிஞர் சுரதா அவர்களிடம் கேட்டோம். இதோ உவமைக் கவிஞர் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

29.05.1630	சார்லஸ் II (இங்கிலாந்து நாட்டு மன்னர்)
29.5.1874	(1) ஜி.கே. செஸ்டர்டன்
	(2) கில்பர்ட் கீத்
	(புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர்கள்)
29.5.1914	குடந்தை வி. சுந்தரேசனார் (பண்ணாராய்ச்சி வித்தகர்)
29.5.1915	கருமுத்து தி. சுந்தரம் செட்டியார் (மதுரைத் தொழிலதிபர்)
29.5.1916	மாண்பமை கோவிந்தன் நாயர் (சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி)
29.5.1917	ஜான் பிட்ஸ்கெரால்டு கென்னடி (அமெரிக்காவின் 35-ஆவது குடியரசுத் தலைவர்)
29.5.1969	ஸ்ரீலஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி (காஞ்சி சங்கரமடம் இளைய மடாதிபதி)

நகரத்தார் சமூகம் தமக்குரிய ஒரு தெய்வத்தைத் தேடிக் கொண்டிருந்தபொழுது தவத்திரு நாச்சியப்ப சுவாமிகள் அவ்விடத்தைப் பூர்த்தி செய்ய 29.5.1923 ஆம் நாளன்று தோன்றியுள்ளார்கள்.

திரு. சுகிசிவம் வாழ்த்தில் கூறியுள்ளது போல சுவாமிகள் எண்பது வயதடைந்த அப்பரைப் போலத் திகழ்கிறார் என்றாலும், எமக்குச் சீர்காழியில் ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தரின் வயதாகச் சுவாமிகள் தோற்றமளிக்கிறார்.

சாகித்திய அகாதமிக்காக பெரியார் வரலாற்றை எழுதும் வேளையில் இத்தமிழ்த்தவசியின் அருமைபெருமைகளை அவனிக்குக் காட்டிட ஒரு வாய்ப்புக் கிடைத்தது ஒரு பேறாகும்.

மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த திருமூலர் தந்த திருமந்திரத்தைப் போல நம் காலத் திருமூலரான சுவாமிகள் சொல்வதையும், செய்வதையும், நாம் திருமந்திரமாக ஏற்று நடப்பதே உய்வதற்கேற்ற வழியாகும்.



அன்புள்ள

கரு. அழகப்பன்

16.05.2003

Phone : (04112) 222115

Sri Chandramouleeswaraya Namaha:
Sri Sankara Bhagavadpadacharya Paramaparagatha
Moolamaya Sarvagnapeeta

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi
JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL
Srimatam Samsthanam
No.1, Salai Street, Kancheepuram - 631 502



கோவிலூர் ஆதீனம் தவத்திரு. நாச்சியப்ப ஞானதேசிக ஸ்வாமிகள் 80-ஆம் ஆண்டு நிறைவு விழா 2003 மே மாதம் 16,17 தேதிகளில் தெய்வத் திருவருளால் வெகு சிறப்பாக நடந்து இவ்வருளாளர் தெய்வத் தொண்டு மேன்மேலும் வளர்ந்து பல்லாண்டுகள் பரம க்ஷேமமாக இருக்க ஆசீர்வதிக்கிறோம்.

- நாராயணஸ்ம்ருதி

24-2

திருச்சிற்றம்பலம்

**திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசன்னிதானம் சீர்-வளர்-சீர்
சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்**

திருவாவடுதுறை - 609 803

அருள் வாழ்த்துரை



கோவிலூர் ஆதீனம் தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் அவர்களை, நாட்டுக்கோட்டை நகரத் தார்கள் குருநாதராகக் கொண்டாடிச் சிவனாகவே பாவித்து வருகிறார்கள். இவர்கள் ஆதீனப் பொறுப் பேற்றவுடன் மழலையரின் கல்வியில் நாட்டங்கொண்டு சிறுவர் பள்ளியைத் தொடங்கினார்கள். பிறகு படிப்படியாக வேத பாடசாலை, திருமுறைக் கல்லூரி, நாதசுர இசைப்பள்ளி, சிற்பக்கல்லூரி முதலான எல்லாம் தம்மாதீனத்தில் பொலிவு பெறும்படி திருக்கோயில் கலாச்சாரங்களைப் பேணி வளர்த்து வருகிறார்கள்.

இவர்கள் காஞ்சி காமகோடி பீடம் சகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளாலும் சிருங்கேரி சங்கராச்சாரிய சுவாமிகளாலும் பாராட்டப் பெற்றவர்கள்.

கோவிலூர் ஆதீனத்தின் கிளை மடங்களைச் சிறப்பாகப் பரிபாலித்து வருவதோடு அமெரிக்காவிலும் ஒரு கிளைமடம் தோற்றுவிக்கிறார்கள்.

இன்னோரன்ன புகழ்படைத்த தவத்திரு சுவாமிகள் அவர்களின் 80-ஆவது ஆண்டின் நிறைவு நினைவாக மலர் ஒன்று மலர்கிறது. இந்த மலர் கற்பாரின் உள்ளம் கவரும் வண்ணம் பெற்று, புகழ் என்னும் மணம் வீசி, தெவிட்டாத சுவை என்னும் தேனும் கொண்டு சிறந்து விளங்கும் பொருட்டு,

நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

'மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்.'

✦✦✦

புனிதமிக்க

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

292 ஆவது குருமகாசன்னிதானம் & ஆதீனகர்த்தர்,

மதுரை ஆதீனம்

20, தெற்காவணி மூல வீதி, மதுரை - 625 001.



நமது நகரத்தார் பெருமக்களுக்குக் குருபீடமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற கோயிலூர் ஆதீனத்தின் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப ஞானதேசிக சுவாமி களின் 80ஆம் ஆண்டு சதாபிஷேக விழா 16, 17.05.2003 அன்று சிறப்புற நடக்கட்டும். அவர்களின் அரிய உயர்ந்த பணிகளை நாம் நன்கு அறிவோம்.

தொண்டு தொடரட்டும்!

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்

கயிலைமாமுனிவர் வித்துவான்
சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம், பேரூர் (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 010. தமிழ்நாடு.

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

கோவிலூர் ஆதீனம் தவத்திரு நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள்

80ஆம் ஆண்டு நிறைவு வாழ்த்து



ஓரும் வேதாந்தம் என்ன உவந்தோதும் நெறியில் நின்று
நேரும் ஊழ்வினையை மாற்றிக் கல்லாடை திருநீற்றோடு
சேரும் நற்றுறவியர்க்குத் தெய்வநூல் பாடம் சொல்லிச்
சாரும் நல்லன்பர்க் கெல்லாம் தமிழ்நெறி சாற்றும் பீடம்.

பொன்னினைப் போகந்தன்னைப் பொருந்திய உலகவாழ்வை
உன்னிடும் உணர்வு மாறிச் செம்பொருள் உணரும்நூல்கள்
தன்னிலே நாட்டம் கொண்ட துறவியர் பலரும் சார்ந்தே
முன்னிய அருள்சேர் கோயி லூர்தனில் மூத்தபீடம்

உலகெலாம் தெரியும் வண்ணம் உயர்தெய்வக் கலைகள்எங்கும்
நிலவுமாறிளையோர் வாழ்வில் நிறைந்திட வழங்கிச் சார்வோர்
பலரும் உள்ளுணர்வால் தெய்வ வழிபாட்டால் மனத்தில் செம்மை
நலம் பெற நாச்சியப்ப ஞானதேசிகர் அருட்சேர்

கோயிலூர் ஆதீனத்தின் கொள்கைசேர் பீடந்தன்னின்
ஞாயிறாய் எண்பதாண்டு நயந்துளார் சாந்தலிங்கர்
ஆய்ந்த வேதாந்த நூல்கள் அருட்தமிழ் பதினான்காக்கும்
தூய்மைசேர் துறவு வாழத் தொண்டாற்ற வாழ்த்துகின்றோம்.
வேண்டுந்தங்களன்பு

அன்புள்ள

சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

உ
சிவ சிவ
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே!

தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்

தொலைபேசி
குன்றக்குடி : 04577 - 264227
காரைக்குடி : 04565 - 437766

வாழ்த்துரை



கோவிலூர் ஆதீனம் தவத்திரு நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் எண்பதாம் ஆண்டு நிறைவு காண்பது மிகுந்த மகிழ்வுக்குரியது.

ஆன்மிகப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி, இலக்கியப் பணி என எல்லாப் பணிகளையும் சிறப்புற ஆற்றிவரும் சுவாமிகள் பல்லாண்டு எல்லா வளமும் நலமும் பெற்று வாழ இறையருளை விரும்பி வேண்டி வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

பொன்னம்பல அடிகளார்

உ

சிவசிவ

கயிலை மாமுனிவர்

திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அதிபர், காசித்திருமடம், திருப்பனந்தாள்



கோவிலூர் ஆதீன அதிபர் தவத்திரு நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் சதாபிஷேக விழா நடைபெற விருப்பதை அறிந்து மகிழ்கிறோம்.

பிறர் பொருளையும் தம்பொருள்போல் எண்ணி வாணிகம் செய்துவரும் நகரத்தார் பெருமக்கட்குக் குருபீடமாக விளங்கி வருவது கோவிலூர் ஆதீனமாகும். இயல்பிலேயே ஆன்மிக உணர்வும் இறைபணி ஆர்வமும் நிறைந்த நகரத்தாரின் நற்பேற்றால் இவ்வாதீனம் அவர்களது குருபீடமாக அமைந்துள்ளது.

இவ்வாதீனத்தில் இன்றைய அதிபராக அருளாட்சி செய்து வரும் தவத்திரு நாச்சியப்ப சுவாமிகள் பூர்வாசிரமத்தில் சென்னை அடையாறு கலாக்ஷேத் திரத்தில் பயின்று அங்கேயே பணிபுரிந்தவர்கள். இளமையிலேயே ஆன்மீக உணர்வும் மனிதநேயமும் மிக்கவர்களாக விளங்கியவர்கள். கலாக்ஷேத்திராவின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து அந்நிறுவனப் புகழை உலகளாவப் பரவச்செய்து தொண்டாற்றியவர்கள்.

நகரத்தாரின் நற்றவப் பயனாகக் கோவிலூர் ஆதீன குரு முதல்வராகப் பீடம் ஏறினார்கள். பட்டமேற்றவுடன்

நாடு வளர வேண்டுமாயின் நல்ல குடிமக்கள் வேண்டும், நல்ல குடிமகனாக வர நல்ல கல்வி வேண்டும் எனும் நோக்கோடு சிறுவர் பள்ளி ஒன்றைத் தொடங்கி, கல்வியுடன் ஒழுக்கம், இறைஉணர்வு, கைவினைத்திறன் ஆகியவையும் கற்றுத்தர ஏற்பாடு செய்தார்கள். தொடர்ந்து வேதாகமங்கள், திருமுறை, நாதஸ்வரம், சிற்பம் ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப் பல பயிற்சி நிலையங்களை உருவாக்கினார்கள். தம் வாழ்நாளில் கோவிலூர் ஆதீனம் சனாதன தர்மங்களை வளர்க்கும் ஒரு நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தை நிறுவி நம் நாட்டில் பண்பாடு, மரபுகளை உலக மக்கள் அறிய வாய்ப்பினை ஏற்படுத்தி உள்ளார்கள். சென்னை, ரிஷிகேசம், அமெரிக்கா ஆகிய இடங்களில் கிளை மடங்கள் நிறுவி ஆன்மிக உணர்வை உலகெங்கும் பரப்பும் அருளாளராகத் திகழ்கிறார்கள்.

ஆன்மிகம் தழைக்க அருந்தொண்டாற்றி வரும் தமிழக ஆதீனங்கள் பலவற்றுள் குறிப்பிடத்தக்க ஆதீனமாகக் கோவிலூர் ஆதீனத்தை உருவாக்கி யுள்ளார்கள். சமுதாயப் பணியிலும், கல்விப் பணியிலும், பெருந் தொண்டாற்றி வரும் ஆதீனகர்த்தர் அவர்களின் 80ஆம் ஆண்டு நிறைவு விழா அவரது தொண்டுகளை உலகறியச் செய்யும் நல்விழாவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய ஆதீனகர்த்தர் எல்லாமடத்து அதிபர் களாலும் போற்றப்படுபவராக விளங்குகிறார்கள். நம்மீதும் நம் திருமடத்தின் மீதும் பேரன்பும் பெருமதிப்பும் உடையவராக விளங்குபவர்கள். அவர்களது 80-ஆம் ஆண்டு நிறைவு விழா நடைபெறுவது நமக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகிறது. கோவிலூர் ஆதீன அதிபர் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து ஆன்மிகப் பணியும், சமூகப் பணியும் ஆற்ற இன்னருள் புரியுமாறு எல்லாம் வல்ல செந்திற்பதிவாழ் கந்தவேள் திருவடிகளைச் சிந்திக்கிறோம்.

சுபம்

சிவ சிவ

உ
சிவமயம்
ஸ்ரீ பாலசித்த குருவே நம
திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்
மயிலம் - 604 304. விழுப்புரம் மாவட்டம்.

தேதி : 04.05.2003



ஆசியுரை

கோவிலூர் ஆதீனம் தவத்திரு. நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகளின் 80-ஆம் ஆண்டு விழாவும், அது தொடர்பாக மலர் வெளியீடும் நிகழ இருப்பதறிந்து மிக்க மகிழ்வெய்து கின்றோம். சுவாமிகள், திருக்கோயில் திருப்பணிகளில் வாழையடி வாழையெனத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள நகரத் தார் மரபில் தோன்றிற் புகழொடு தோன்றுக என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க வையத்தால் வாழ்வாங்கு வாழும் ஞானச்செல்வர் ஆவார். அவர்கள் சமயநெறி நின்று சமுதாய ஈடேற்றத்திற்கு அரும்பெருந் தொண்டினை ஆற்றிவருவதில் அப்பருக்கு ஒப்பாக எண்ணத்தக்க ஆயிரம் பிறை கண்ட அண்ணலாக விளங்குகின்றார்கள்.

செந்தமிழையும் சிவநெறியையும் தம் இருகண்களெனக் கொண்ட சுவாமிகள், ஆன்மிகத்தால் நாடு, மொழி, இனம், காலம் கடந்த நிலையில் உலகெங்கும் வாழும் மனிதப் பிறவியினர், இறைவனை வழிபட்டு வாழும் பெருவாழ்வினைப் பெறவும், எவ்வுயிரும் தம்முயிராக எண்ணி இரங்கித் தொண்டு செய்யவும். தாமே வழிகாட்டியாக இருந்து அனப்பரிய பணிகளை ஆற்றிவரும் சுவாமிகள். மேன்மேலும் நூற்றாண்டு விழா முதலிய பல விழாக்களைக் கொள்ளும் வகையில் நீண்ட. ஆயுளுடன் நிறைந்த வழிகாட்டுதலையும் அருள வேண்டுமென்றும், அவர்களின் வாழ்வும் பணியும் குறித்தும் பன்முக நோக்கில் வெளிவரவுள்ள ஞானமலர் சிறந்து விளங்க வேண்டுமென்றும் எல்லாம் வல்ல மயிலந்தன் மாமலை வள்ளிதெய்வானையர் உடனுறை மணக்கோல முருகன் திருவருளையும். அவனருள் பெற்ற ஆதீன முதற்குரவர் ஸ்ரீ பாலசித்தர் குருவருளையும் நினைந்து வாழ்த்துகின்றோம்.

Dr. Justice AR. Lakshmanan
Judge
Supreme Court of India

4, K. Kamraj Lane,
New Delhi - 110011.



நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்களுக்கு குரு பீடமாகவும் ஆதீன மாகவும் விளங்கும், கோவிலூர் ஆதீனம் தவத்திரு நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் எண்பதாம் ஆண்டு - அகவை - விழா கோவிலூரில் சிறப்பாக நடைபெற விருப்பது அறிந்து மட்டமற்ற மகிழ்ச்சி.

ஆயிரம் பிறைகண்ட அருளாளர் தவத்திரு நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகளின் தெய்வத் தொண்டு, தமிழ்ப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி, ஆன்மிகப் பணிகளை நேரிடையாக மிக நன்கறிந்தவன் நான். எனக்கும் கோவிலூர் ஆதீனத்துக்கும் தொழில் முறையாக 30 ஆண்டுகள் தொடர்புண்டு.

சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு மற்றவர்கள் பின்பற்ற வேண்டியதொன்று.


ஆதீனத் தலைமை ஏற்ற பிறகு சுவாமிகள் செய்த வளர்ச்சியை கடிதம் மூலம் வடிவமைக்க இயலாது. புத்தகமாகத் தான் எழுத வேண்டும்.

விழா இனிது நடைபெற என் வாழ்த்துக்கள்.

சுவாமிகளின் அருளாசியை வேண்டி,

அரு. இலக்குமணன்
உச்சநீதிமன்ற நீதிபதி, டெல்லி

நகரத்தார் நல்வாழ்வு அறநிலையமும் நன்கொடையாளர்களும்



2002 ஆம் ஆண்டு மே மாதம் 3,4,5 தேதிகளில் கோவிலூர் ஆதீனம் சீர் வளர்சீர் நாச்சியப்ப அடிகள் தலைமையில் கோவிலூரில் நடைபெற்ற 96 ஊர் நகரத்தார் மாநாட்டில் நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்களில் முதலாவது தீர்மானம், நகரத்தார் பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்புக் கல்வி தருவதற்காக ரூபாய் ஏழு கோடியை மூலதன இலக்காகக் கொண்டு நகரத்தார் நல்வாழ்வு அறநிலையை ஏற்படுத்துவது என்பதாகும். அதன்படி கீழே குறித்தவர்களை அறங்காவலர்களாகக் கொண்டு நகரத்தார் நல்வாழ்வு அறநிலை ஏற்படுத்தப் பெற்றது.

சீர் வளர் சீர் நாச்சியப்ப அடிகள் - நிர்வாக அறங்காவலர்

மாண்புமிகு நீதியரசர்

Dr. AR. லெட்சுமணன், தேவகோட்டை

SP.ST. பழநியப்பன், காரைக்குடி

திரு. **V.N.** சிதம்பரம், மதுரை

திரு. ரகுபதி சுப்பிரமணியன், சிங்கப்பூர்

திரு. **N.** நாராயணன், சென்னை

Dr. MR. முத்தையா, மதுரை
Dr. முத்துகருப்பன், மதுரை
திரு. N. நாராயணன், காரைக்குடி
திரு. A. இராமநாதன், தேவகோட்டை
திரு. R. சேக்கப்பன், மதுரை

இலக்குத் தொகையான ரூ. 7 கோடி திரட்டப் பெற்று அதிலிருந்து கிடைக்கும் வட்டி ரூ. 56 இலட்சமாக இருக்கும் என்று கணக்கிட்டு அதிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் உதவித் தொகை வழங்கலாம் என முடிவு செய்யப்பட்டது. இலக்குத் தொகை முழுவதும் திரட்டும் வரை தாமதிக்காமல் உடனேயே உதவி வழங்க வேண்டும் என்று முதல் ஆண்டு உதவிக்கான திட்டத் தொகை **ரூ. 56 லட்சம் முழுவதையும் சுவாமிகளே** வழங்கியதால் சென்ற ஆண்டு சுமார் 300 மாணவ மாணவியருக்குக் கல்விக் கடனுதவித் தொகையும் வழங்கப்பட்டிருக்கிறது. அது பற்றிய விவரங்கள் இத்துடன் இணைக்கப் பெற்றுள்ளன.

இலக்குத் தொகையில் ஒவ்வொரு நகரத்தாரும் பங்கு பெற வேண்டும் என்ற சுவாமிகளின் விருப்பத்தின்படி பள்ளிக்கு ரூ. 1,001/- வீதம் 31/03/2003 வரை சுமார் 209 பேர் நன்கொடை வழங்கினர். ரூ. 50,000/- க்கு அதிகமாக நன்கொடை வழங்கியவர்கள் விவரம் பின்வருமாறு:

1.	திரு. டி. கனகசபை அவர்கள்	1,00,000
2.	திரு. எம்.ஆர். ராமையா அவர்கள்	50,000
3.	திரு. வி.என். சிதம்பரம் அவர்கள்	1,00,000
4.	திரு. என். நாராயணன் அவர்கள்	50,000
5.	திரு. டாக்டர் எம்.ஆர். முத்தையா அவர்கள்	1,00,000
6.	திரு. ஏ.ஆர்.எம். பழனியப்பன் அவர்கள்	1,00,000
7.	திரு. எம்.கிருஷ்ணன் அவர்கள்	50,000
8.	தியாகராஜன் சிதம்பரம் சேரிட்டிஸ்	1,00,000
9.	ஸ்ரீ மங்கையர்க்கரசி மில்ஸ்	1,00,000
10.	திரு. சுப்பிரமணியன் அவர்கள்	1,00,000
11.	திரு. சி.டி. சேது அவர்கள்	50,000

கோவிலூர் ஆதீனத்தின் வழி

2002 ஆம் ஆண்டில் கல்வி உதவி பெற்றவர்கள்

ஊர்வரிசையாக விவரம்

ஆ. தெக்கூர்	8
அலவாக் கோட்டை	3
அரிமளம்	1
அரியக்குடி	2
ஆத்தன்குடி	2
அவனிபட்டி	1
சொக்கலிங்கம்புதூர்	2
சொக்கநாதபுரம்	3
தேவகோட்டை	31
கே. அளகாபுரி	1
கே. லக்ஷ்மிபுரம்	2
கடியாபட்டி	6
காளையார்மங்கலம்	2
கல்லல்	8
கல்லுப்பட்டி	1
கானாடுகாத்தன்	4
கண்டனூர்	5
கண்டவராயன்பட்டி	5
கண்டரமாணிக்கம்	2
காரைக்குடி	26
கீழச்சிவல்பட்டி	7
கீழப்பூங்குடி	1
கொப்பனாபட்டி	4
கொத்தமங்கலம்	2
கோட்டையூர்	4
குழிபிறை	4
குருவிகொண்டான்பட்டி	5
மதகுபட்டி	3
மிதிலைபட்டி	3
மகிபாலன்பட்டி	3
மானகிரி	1
மேலைச்சிவபுரி	2
நற்சாந்து பட்டி	2
நாச்சியாபுரம்	1
நாட்டரசன் கோட்டை	8
நேமத்தான்பட்டி	3
நெற்குப்பை	8
ஓ. சிறுவயல்	9
ஒக்கூர்	1
பி. கருங்குளம்	1
பாகனேரி	9
பள்ளத்தூர்	8
பனையபட்டி	3
பொன்னமராவதி	2
பொன்புதுப்பட்டி	8
பூலாங்குறிச்சி	2
புதுவயல்	4
ராமச்சந்திரபுரம்	3
ராங்கியம்	3
ராயவரம்	11
சக்கந்தி	1
செவ்வூர்	2
சண்முகநாதபுரம்	5
சிறுவயல்	1
சிறுகூடல்பட்டி	1
சிவகங்கை	1
தேனிபட்டி	2
உலகம்பட்டி	2
வலையபட்டி	19
வேகுபட்டி	7
வேந்தன்பட்டி	5
வெற்றியூர்	1
விராச்சிலை	2
விராமதி	3
மொத்தம்	292

கொடுக்கப்பட்ட
மொத்த தொகை 50,40,000/-

விவரம்

என்ஜீனியரிங்	186
பாராமெடிக்கல்ஸ்	10
பாலிடெக்னிக்	57
கேட்டரிங்	6
எம்.பி.ஏ., எம்.சி.ஏ	13
பி.ஜி. கோர்ஸ்	7
மொத்தம்	292

Kovilur Aadinam
Thavatthiru Naachiappa Gnana Desika Swamigal



Neat Principled and Divine Human! O
Affable and noble soul! we adove you
Adore you and adore you!!
Crescent moon thousand you have gazed! O
Holy Saint! O ! An embodiment of wisdom!
Illumination hovers around you and its is a panacea to the affected souls!
Affluence divine, you are blessed with, to erase the
Poverty of ignorance and to install faith in the faithless
Peace the perennial pleasure you aspire for
And you preach the divine thoughts, giving up the temporal wealth!
Srimathi Rukmani Arundale showered her affection and Paramaacharya had shown the direction!
Wealth is for rendering service to God and mankind, you chant ever
And you have been showing the way by practicing it!
Maanagiri on twenty ninth May nineteen twenty three enhanced its honour;
If felt proud it had given you to the world, the twelth Aadinam!
Great service you render to mould the young minds
All are 'negatives' and you process them and give their 'clear' picture O!
Lovable Swamigal! No doubt you are another Pattinathaar!!



S.P. GURUPARAN
Rtd., Professor of Political Science
Presidency College - Chennai - 5.



வாழிய சொன்னோம்

அருள்மிகும் ஆண்டவர் அவர்வழி வந்தோர்
பொருள்நிறை வுடைய பொற்புறு ஞானி
கொற்றவாள் இறைவர் கூடிய நெல்லை
நற்றவத் தாள்பணி ஞானச் செல்வர்
நிழற்படப் பிடிப்பில் நிலைநூற் பதிப்பில்
பழகிய திறத்தர் பார்புகழ் கோவிலூர்த்
திருமடத் ததிபர் திருப்பொலி கோயிற்
பெருங்கலை வாழப் பேணிடும் பெற்றியர்
அமெரிக் காவில் ஆடும் தில்லைக்
கூத்தனுக் கென்றே கோயில் அமைக்கும்
ஞானச் சான்றோர் சங்கரர் நெறியில்
மோனத் தவநிலை முழுதுணர் முனிவர்
நகரத் தார்குலம் நலம்பெறு மாறு
பற்பல பணிகள் பல்வகை இயற்றி
மங்கையர் மணக்கவும் மாண்பொருள் ஈந்தோர்
உயிரே இறையென உரைநெறி போற்றும்
கருத்தினைத் தமிழ்வழி கற்றுத் தெளிய
ஆகிய நூல்கள் அனைத்தும் எளிய
முறையில் வெளிக்கொணர் முயற்சியின் முன்னோர்
எண்பதாம் அகவை இனிதுநிறை வெய்தும்
முத்து விழாவின் முதற்பெரு நாயகர்
நற்புகழ் சேர்த்த நாச்சியப்ப அடிகள்
பாடும் புகழ்சால் பரணர் கவியென,
தெய்வத் திருமறை திருமந் திரநூற்
பொருளென வாழ்ந்து புவிமிசை என்றும்
தகைபெற வேண்டியே தமிழால்
வாழிய சொன்னோம் வணங்கி மகிழ்ந்தே.



காப்பியக் கவிஞர் மீனவன்
திணை - பாடாண்
துறை - இயன்மொழி வாழ்த்து



அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை

பாரெங்கும் பண்பாடு,
கலை, கல்வி காத்திட
பரமன் மகிழப்
பணிசெய்வோம்



தமிழ்ச் சுரங்கம்
சென்னை - 92.